Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 12

திங்கட்கிழமை
08 டிசெம்பர் 2025

கார்த்திகை 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## பேரிடர் பலி 627ஆக உயர்வு

கொழும்பு, டிசெ.8
இயற்கைப் பேரிடர் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 627 ஆக உயர்ந்துள்ளது என்று இடர் முகாமைத்துவ நிலையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள் »11



## அணையாவிளக்கு தூபியை மீண்டும் உடைத்த விசமிகள்

யாழ்ப்பாணம், டிசெ.8
அரியாலை, செம்மணி வளைவுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அணையாவிளக்குப் போராட்ட நினைவுத்தூபி நேற்று இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளது. »10

கொக்குத்தொடுவாய் எல்லைக் கிராமத்தில்

# தமிழரின் பூர்வீகக்காணிகளை அபகரிப்பதற்கு கடும் முயற்சி!

## தடுத்து நிறுத்தக் கோரிக்கை

**முல்லைத்தீவு, டிசெம்பர் 8**

**முல்லைத்தீவு, கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எல்லைக் கிராமங்களில் ஒன்றான கொக்குத்தொடுவாய் 15ஆம் கட்டையில் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை, கொக்கிளாய் முகத்துவாரத்தில் அத்துமீறிக்குடியிருக்கும் பெரும்பான்மை இனத்தவர்கள் ஆக்கிரமிக்கும் முயற்சிகளை எடுத்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.** »11

யாழ்ப்பாணத்தில்

## பண்ணைக் கடலில் மூழ்கி இரு இளைஞர்கள் மரணம்

### இருவர் மருத்துவமனையில்





யாழ்ப்பாணம், டிசெ.8
யாழ்ப்பாணம் - பண்ணைக் கடலில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.
பண்ணைக் கடலில் நீராடிய நால்வர் நீரில் மூழ்கியுள்ளனர். அந்தப் பகுதியில் உள்ளவர்கள் அவர்களை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். »10

யாழ்.பல்கலைத் துணைவேந்தர் தெரிவு நேரத்தில்

## வெளிவாரிப் பேரவை உறுப்பினர்கள் கொழும்புக்கு திடீர் அழைப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.8
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கான துணைவேந்தரை ஜனாதிபதி நியமனம் செய்வதற்கு ஏற்றவகையில் மூவரைத் தெரிவு செய்வதற்கான விசேட பேரவைக் கூட்டம் நாளை நடைபெறவுள்ள நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட வெளிவாரிப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு சந்திப்பொன்றுக்காக கொழும்புக்கு »10

## இலங்கையர் தின நிகழ்வுகள் இரத்து

கொழும்பு, டிசெ.8
அடுத்தவாரம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த இலங்கையர் தின நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று சிங்களவார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்ட பேரிடர் நிலையை அடுத்தே ஜனாதிபதியால் »11

## இலங்கையின் கோரிக்கைக்கு நாணய நிதியம் முன்னுரிமை



கொழும்பு, டிசெ.8
இயற்கைப் பேரிடரை அடுத்து இலங்கை அதிகாரிகள் விடுத்த அவசர நிதியுதவிக் கோரிக்கைக்குமுன்னுரிமைஅளித்து, விரைவு நிதியளிப்பு வசதி தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை பரிசீலித்து வருகின்றது »10

## சுனாமியை விஞ்சிய ‘டித்வா’ பாதிப்புகள்

கொழும்பு, டிசெ.8
டித்வா புயலால் இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பு, 2004ஆம் ஆண்டு சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பை விடவும் 10 மடங்கு அதிகம் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர். »11

## முன்னாள் அமைச்சர் இராஜதுரை காலமானார்



கொழும்பு, டிசெ.8
இலங்கையின் முன்னாள் அமைச்சரும், தலைசிறந்த பேச்சாளருமான முன்னாள் அமைச்சர் ‘சொல்லின் செல்வர்’ செல்லையா »11

## சட்டவிரோத சொத்துக் குவிப்பு யாழ். நகரத்தில் வீடு முற்றுகை

யாழ்ப்பாணம், டிசெ.8
சட்டவிரோத சொத்துக்குவிப்புத் தொடர்பில் யாழ்ப்பாணத்தில்உள்ளவீடொன்றில் நேற்றுச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் பண்ணைப் பிரதேசத்திலுள்ள வீடொன்றிலேயே பொலிஸாரும், »10



## ‘வீடு - சங்கு’ தலைவர்கள் யாழில் நேற்றுச் சந்திப்பு

### இணைந்து செயற்பட இணக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.8
இலங்கைத்தமிழரசுக் கட்சியின் தலைவர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களும் நேற்று யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.
இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் »11

மூச்சந்தி முரளி

‘உலையுலுக்கு சனத்துக்கு உதவ நேரமில்லை, ஆனா இப்பிடி உப்புச்சப்பில்லாம கூடிக்கும்மியடிக்க மட்டும் நேரமிருக்கு கண்டியளோ’

## எலிக்காய்ச்சலால் ஒருவர் உயிரிழப்பு


கிளிநொச்சி, டிசெ.8
காய்ச்சலால் பீடிக்கப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், அவரது உயிரிழப்புக்கு எலிக்காய்ச் »10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 07.12.2025 | திகதி 07.12.2025 | திகதி 07.12.2025 | திகதி 07.12.2025 | திகதி 07.12.2025 | திகதி 07.12.2025 | திகதி 07.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4278 | சீட்டிழுப்பு இலக்கம் 1345 | சீட்டிழுப்பு இலக்கம் | சீட்டிழுப்பு இலக்கம் 2384 | சீட்டிழுப்பு இலக்கம் 6036 | சீட்டிழுப்பு இலக்கம் 2066 | சீட்டிழுப்பு இலக்கம் 0152 |
| ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கினம் ரிஷபம் | ஆங்கில எழுத்து | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து F | ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கினம் துலாம் |
| | | | சுப்பர் இலக்கம் 09 | | | |
| வெற்றி இலக்கங்கள் 50 59 62 74 | வெற்றி இலக்கங்கள் 30 42 53 62 | வெற்றி இலக்கங்கள் | வெற்றி இலக்கங்கள் 51 56 74 77 | வெற்றி இலக்கங்கள் 6 2 2 6 1 2 | வெற்றி இலக்கங்கள் 30 44 46 61 | வெற்றி இலக்கங்கள் 11 29 65 |
| விசேட எழுத்து K | | | | | விசேட எழுத்து M | |

# இழப்பீட்டுப் பணிகளின்போது துல்லியத் தரவுகள் அவசியம்!



## ஜனாதிபதி அறிவுறுத்து

**கொழும்பு,டிசெ. 8**

**பொருளாதார முடிவுகளை எடுப்பதில் துல்லியமான தரவுகள் மிகவும் முக்கியமாகும். எனவே எப்போதும் துல்லியமான தரவுகளை வழங்குவது அதிகாரிகளின் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்**

மாத்தளை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அனர்த்தத்தால் சேதமடைந்த பயிர் நிலங்களுக்கு இழப்பீடு வழங்கும் பணி டிசெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்கப்படவேண்டும்.

இழப்பீட்டுத்தொகையை மிகவும் தகுதியானவர்களுக்கு வழங்கக் கூடியவகையில் துல்லியமான தரவுகளை வேறுபடுத்திக் கண்டறியவேண்டும். மின்சாரம், நீர் அல்லது தொடர்பாடல் போன்ற எந்தவொரு வசதியையும் பொது மக்களுக்கு வழங்கும்போது பிரதான அலுவலகத்துக்கு தகவல்களை அனுப்பி மௌனம் காப்பதால் எந்தப்பயனும் இல்லை. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்ந்து தொடர்புகொள்வதன் மூலம் பொதுமக்களுக்கு தமது சேவைகளை உடனடியாக வழங்குவது அதிகாரிகளின் பொறுப்பு - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 07.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0744 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 7 6 5 0 8 0 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 07.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3010 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 19 40 62 63 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 07.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 03 24 35 74 |
| வெற்றி வாரம் | 5171 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 07.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0840 |
| வெற்றி இலக்கம் | 34 35 47 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 07.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| | சிம்மம் |
| வெற்றி இலக்கம் | 02 16 25 44 |
| சீட்டிழுப்பு வாரம் | 4722 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 07.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கம் | 22 56 62 67 |
| வெற்றி வாரம் | 2186 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 07.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 30 43 61 64 |
| வெற்றி வாரம் | 2836 |

# நிவாரணம் வழங்குவதில் தாமதம் செய்யாதீர்கள்!

## எதிர்க்கட்சித்தலைவர் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.8

நாட்டில் தற்போதைய இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவிப்பை விடுத்துள்ளபோதும், பயனாளிகளுக்கு இன்னும் நிவாரணங்கள் சென்றடையவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரணம் மற்றும் உதவிகளை அதிகபட்சமாக, விரைவாக வழங்கவேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரணம் மற்றும் உதவிகளை அதிகபட்சமாக விரைவாக வழங்கவேண்டும்.

ஆனால் அரசாங்கம் அறிவிப்புச் செய்த நிவாரணங்கள் மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. கட்டாயமாகக் கிடைக்கவேண்டியவர்களுக்கு இன்னும் உதவிகள் சென்றடையவில்லை.


அதேவேளை அரசாங்கம் தற்போது குறைநிரப்புப் பிரேரணையொன்றை சமர்ப்பித்துள்ளது. நாடு முகங்கொடுத்திருக்கும் நிலைமைகளை எடுத்துக்காட்டி சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சு நடத்துமாறு நாம் பலமுறை கோரிக்கை விடுத்து வந்தோம். அதனைப் புறக்கணித்துவிட்டு, இப்போது அரசாங்கம் பேச்சை ஆரம்பித்துள்ளது. நிலைமைகளைக் கையாளும் விடயத்தில் அரசாங்கம் இன்னும் செயற்றிறனோடு நடந்துகொள்ளவேண்டும்- என்றார். (க-இ)



# உ/தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணி ஆரம்பம்!

கொழும்பு, டிசெ.8

சீரற்ற வானிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த உயர்தரப்பரீட்சையின் முதற்கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார். இதற்கமைய, விடைத்தாள் மதிப்பீட்டின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மோசமான வானிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட உயர்தரப்பரீட்சையின் மீதமுள்ள பாடங்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத் தொடக்கத்தில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



# கண் நோய்த் தொற்றுகள் பரவும் அபாயம் உயர்வு!

## மக்கள் அவதானமென சுகாதாரத்துறை எச்சரிக்கை

கொழும்பு,டிசெ. 8

வெள்ளப் பேரிடரைத் தொடர்ந்து மக்கள் கூடும் இடங்களில் கண் தொற்றுகள் எளிதில் பரவக்கூடும் என்பதால் மக்கள் விழிப்புடன் இருக்குமாறு சுகாதார மேம்பாட்டு பணியகம் எச்சரித்துள்ளது.

கண் நோய்த்தொற்றுகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மக்கள் ஆரோக்கிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். கண் தொற்றுக்கான அறிகுறிகளாக கண்கள் சிவத்தல் மற்றும் வீக்கம், நீர் வடிதல் மற்றும் வெளியேற்றம், ஒளி உணர்திறன், கண் அரிப்பு, கண்களில் மண் அல்லது தூசி இருப்பது போன்ற உணர்வு என் பன காணப்படுகின்றன. நோய்த் தொற்று பரவாமல் தடுக்க அடிக்கடி தண்ணீரில் கைகளைக் கழுவ வேண்டும். கண்களைத் தொடுவதையோ அல்லது தேய்ப்பதையோ தவிர்க்கவேண்டும். அத்துடன் அறிகுறிகள் ஒரு வாரத்துக்கு மேலாக நீடித்தால், மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் அத்துமீறலுக்கு விசேட 'ஒப்ரேசன்' ஆரம்பம்!

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு,டிசெ. 8**

**இந்தியமீனவர் அத்துமீறலைக் கட்டுப்படுத்த எமது மீனவர்களும் அமைச்சும் இணைந்து விசேட 'ஒப்ரேசன்' ஒன்றை முன்னெடுக்கவுள்ளன என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு இந்தியா ஒரு புறத்தில் மனிதாபிமான உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் மறுபுறத்தில் இந்திய மீனவர்கள் இடர் நெருக்கடியையும் கருத்திற் கொள்ளாமல் எமது கடற் பகுதிக்குள் அத்துமீறி எங்கள் கடல் வளங்களை அள்ளிச் செல்கிறார்கள். இது நியாயமற்றதொன்றாகும்.

இதுகுறித்து நாங்கள் பல தடவைகள் பல தரப்புகளுடனும் பேசிவிட்டோம். ஆனால் ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக இல்லை. மாறாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துக்கொண்டே போகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி இந்த விடயத்தில் அதிக அக்கறை செலுத்தி எமது கடல் வளம் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய தமிழக அரசுடன் பேசவேண்டும். இவ்வாறு இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடரும் பட்சத்தில் அதனைத் தடுப்பதற்கு எமது மீனவர்களும், அமைச்சும் இணைந்து 'விசேட ஒப்ரேசன்' ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (ச-இ)



# சுவிஸ் அரசால் நிவாரண உதவி

கொழும்பு,டிசெ. 8

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீட்டெடுக்க இலங்கைக்கான அவசர மனிதாபிமான உதவிகளை சுவிற்சர்லாந்து அரசாங்கம் முன்னெடுத்துள்ளன. அதற்கமைய அந்நாட்டு விமானம் ஒன்று நிவாரணப் பொருள்களுடன் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தது.

இந்த உதவியின் ஒரு பகுதியாக ஏழு நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றும் இலங்கைக்கு வந்துள்ளது.

இந்த நிபுணர் குழு, இலங்கையில் உள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் இணைந்து குடிதண்ணீர், சுகாதாரம், சுகாதார பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் நிலைமையறிக்கை, அவசர தேவைகள் மதிப்பீடு மற்றும் அவசர உதவி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது. (ச-இ)

# நிரம்பி வழியும் 71 நீர்த்தேக்கங்கள்

கொழும்பு, டிசெ.8

36 பிரதான நீர்த்தேக்கங்கள் உட்பட 71நீர்த்தேக்கங்கள் தற்போதும் நிரம்பி வழிவதாக நீர்ப்பாசனத்துறை தெரிவித்துள்ளது.

திணைக்களத்துக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்களின் மொத்த நீர்க் கொள்ளளவில் சுமார் 80 சதவீதம் தற்போது சேமிக்கப்பட்டுள்ளது. இதேவேளை மல்வத்து ஓயாப் பகுதியில் லேசான வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# இடி, மின்னல் தாக்கத்தால் யாழில் தேவாலயம் சேதம்!

யாழ்ப்பாணம்,டிசெ. 8

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இடி, மின்னல் தாக்கத்தால் தேவாலயம் ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/187 சங்குவேலி கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி தேவாலயத்திலேயே இந்த இடி, மின்னல் தாக்கம் இடம்பெற்றது.

இடி, மின்னல் தாக்கத்தால் உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-27)

# இடர் பாதிப்பு நிதியுதவி பிரிட்டன் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ.8

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு வழங்கவிருந்த நிதியை பிரிட்டன் அதிகரித்துள்ளது. அதன்படி நிதியுதவியின் மொத்தத்தொகை ஒரு மில்லியன் டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டன் உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது. (ச-இ)




# உதவியிலையும் இனவாதம்?

**காடு பத்தியெரியேக்குள்ள கரடி கள்ளித்தடியை முறிச்சு காவடி ஆடினமாதிரி, நாடே 'டித்வா' பேரிடரால நொந்துபோய்க் கிடக்கேக்கையும் சிலர் உதவி செய்யிறதிலையும் இனவாதம் காட்டியிருக்கினம். மலையகத்துக்குத்தான் உந்த டித்வா புயலாலையும், மழையாலையும் பெருஞ்சேதம், அங்க தங்கட வீடு வாசல், சொந்த பந்தங்களையெல்லாம் மண்சரிவுக்குள்ளையும், வெள்ளக்காட்டுக்குள்ளையும் பறிகுடுத்திட்டு, இருக்க இடமில்லாமல் இடர்நிலையங்களுக்குள்ள தஞ்சம் புகுந்த சனங்களுக்குக் கனபேர் உதவியள் செய்தவை. அரசாங்கம் ஒருபக்கம் கவனிச்சாலும், அதைவிட பொதுசனமும் தாங்களாவே முன்வந்து பாதிக்கப்பட்ட சனத்துக்கு என்னென்ன உதவியள் தேவையெண்டு கேட்டறிஞ்சு அதுகளையெல்லாம் குறையில்லாமல் செய்தவை.**

**இப்பிடியான நல்லமனம் இருக்கிற இடத்தில சில நஞ்சுமனம் கொண்டதுகளும் இருக்கத்தானே செய்வினம். அவையள் இதுதான் சாட்டெண்டு, தங்கட வீட்டில இவ்வளவுநாளும் குப்பையாக் கிடந்த, பழைய துணிமணியையெல்லாம் மூடைகட்டி, பாதிக்கப்பட்ட சனங்கள் இருந்த முகாமுக்கு அனுப்பிவைச்சிருக்கினம். முகாமில இருந்த தமிழ்ச்சனங்களும் மூடை மூடையா உடுபுடவையள் வந்திறங்க, எல்லாம் புதிசுதான் எண்டு ஓடிப்போய்ப் பாத்திருக்கினம். ஆனால் அந்த மூடைக்குள்ள இருந்த துணிமணியைவிட இப்ப தாங்கள் போட்டிருக்கிற உடுப்புகளே பரவாயில்லை எண்டதால, அதுகளைத் திருப்பி அனுப்பிட்டினம். உதவி எண்ட பேரில தங்கட வீட்டுக்குப்பையளை இப்பிடிக் கட்டி அனுப்ப எப்பிடித்தான் சிலருக்கு மனம் வருகுதோ தெரியேலை. அதுவும் சனங்கள் இப்பிடி ஒரு பேரிடருக்குள்ள கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கேக்க, அவைக்கு உதவி செய்யாட்டியும் பரவாயில்லை, இப்பிடி உதவி எண்டபேரில பாவிக் கேலாத உடுபுடவையளைக் குடுக்கிறதை மாதிரி வக்கிரத்தைக் காட்டக் கூடாது.**

**இதுக்குள்ள எங்க இனவாதம் இருக்கெண்டு நீங்கள் கேப்பியள். அங்கதான் இருக்கு விசயம். உந்த மழை வெள்ளத்துக்க தனிய தமிழ்ச்சனம் மட்டும் மலையகத்தில மாட்டுப்படேலை. சிங்கள ஆக்களுக்கும் சேதாரம்தான். அநேகமான இடங்களில தமிழ்ச் சனங்கள் தனிமுகாமிலையும், சிங்களச் சனங்கள் தனியா வேற முகாம்களிலையும் தான் இருந்திருக்கினம். இந்தமுறை வெளியாக்கள் உதவி செய்யிறதெண்டாலும், அதை அரசாங்க அதிகாரிமாரிட்ட ஒப்படைச்சால், அராசங்க அதிகாரியள்தான் எங்கெங்க குடுக்கோனும் எண்டு முடிவெடுத்து அந்த உதவிப் பொருள்களை அனுப்பினவை. மலையகத்தில முகாமில இருக்கிற சனங்களைப் பராமரிக்கிற பணியில சிங்கள அதிகாரிமார்தான்கூட இருந்திருக்கினம். அவையள்தான் நல்லநிலையில இருந்த, பாவிக்கக் கூடிய, புது உடுப்புகளையெல்லாம் சிங்களச்சனம் இருக்கிற முகாம்களுக்கு குடுத்திட்டு, பழைய பாவிக் கேலாத உடுப்புகளைக் கொண்டந்து தமிழ்ச்சனங்களுக்கு முன்னால கொட்டிப்போட்டு, தேவையானதை எடுக்கச் சொன்னவையாம். இப்பிடி உதவி செய்யேக்க கூட பாரபட்சம் , இனவாதம் பாக்கிறவை எப்பிடி எங்களுக்கு சுயாட்சியோ சமஷ்டியோ தருவினம்?? உதவிப் பொருளிலேயே இப்பிடி புறிம்பு காட்டுற லட்சணத்தில, "எல்லாரும் இனமதம் கடந்து நாட்டை மீட்டெடுப்பம்"எண்டு அநுர சொல்லுறது நடக்கிற காரியமோ?**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரித்து, உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்காலத்துக்குப் பயன் தரும் வகையில் முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். சிலருக்கு வாழ்க்கைத்துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் தேவையான உதவிகளும் கிடைக்கும். குடும்பத்தினர் உங்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பார்கள்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் உறவினர்கள்மூலம் கிடைக்கும் செய்தி அளவற்ற மகிழ்ச்சி தருவதாக இருக்கும். குடும்பத்தேவைகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும்.

**துலாம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை. மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவி செய்வார்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வியாபாரத்தில் பாக்கித் தொகை வசூலாகும்.

**மகரம்:** சகோதரர்களால் சில சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்குத் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குத் தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பண இலாபம் உண்டாகும். கடன்களில் ஒரு பகுதியைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



## பருத்தித்துறை வர்த்தக சங்கத்தால் 1.1 மில்லியன் ரூபா நிவாரணம்!

யாழ்ப்பாணம்,டிசெ. 8

'டித்வா' பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பருத்தித்துறை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் 1.1 மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் இரண்டு கட்டங்களாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு மற்றும் பருத்தித்துறை, மருதங்கேணிப் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட மக்களுக்கு அவை கையளிக்கப்படவுள்ளன.

பருத்தித்துறை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த வெள்ள நிவாரண உதவித்திட்டத்தில் பருத்தித்துறை முச்சக்கர வண்டி சேவைச் சங்கம் மற்றும் ஓடக்கரை சன சமூக நிலையம் என்பன இணைந்து செயற்பட்டன. (ச-100)



இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், நுவரெலியா உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு உதவிடத் தேவையான பொருள்கள் சேகரிக்கும் பணிகளை யாழ்ப்பாணம் சிற்றிலயன்ஸ் கழகத்தினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கோண்டாவில் சந்தி, உரும்பிராய் ஆகிய பகுதிகளில் முன்னெடுத்தனர். (ச-66)

## ஏசட் அமைப்பினால் உலருணவுப்பொதிகள்

முல்லைத்தீவு,டிசெ. 8

நோர்வே நாட்டின் ஏசட் அமைப்பின் ஏற்பாட்டில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உலருணவுப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய யாழ். மாநகரசபை உறுப்பினர் சண்முகநாதன் பிரதீபன் தலைமையில் குறித்த உலருணவுப்பொதிகளைக் கையளிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனும் கலந்துகொண்டு உணவுப்பொதிகளை வழங்கிவைத்திருந்தார்.

இதேவேளை 25 பொதிகள் முல்லைத்தீவின் கைவேலி, புதுக்குடியிருப்புப் பகுதி மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (ச-26)

## தேயிலை உற்பத்தி கடுமையாகப் பாதிப்பு

கொழும்பு, டிசெ.8

கடந்த வாரம் இலங்கையில் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவைத் தொடர்ந்து தேயிலைத் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேயிலைத் தொழிற்றுறை மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்ப பல மாதங்கள் ஆகலாம் என்று கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் அதிகாரி லுசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார். இலங்கையில் தேயிலை ஏற்றுமதி செய்யும் .30 நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்கள் ஆண்டுக்கு சுமார் 110 பில்லியன் மதிப்புடைய தேயிலையை ஏற்றுமதி செய்கின்றன. இந்தநிலையில் அந்த நிறுவனங்கள், மீண்டும் செயற்பட இரண்டு அல்லது மூன்று வாரங்கள் ஆகலாம். இதன் காரணமாக, தேயிலைத் தொழில் இழப்புகளைச் சந்திக்கும். சேதமடைந்த இயந்திரங்களை மீட்டெடுக்க இலங்கையில் தொழில்நுட்பங்கள் இல்லை. எனவே அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டியிருக்கும் என்றும் லுசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார். (த-இ)

# சர்வதேச விசாரணைக்கு அநுர அரசும் பின்னடிப்பு

### மன்னார் ஆயர் தெரிவிப்பு

மன்னார்,டிசெ.8

இறுதிப்போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், அரசியற்கைதிகளின் விடுதலை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் புதிய அரசாங்கமும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதிய திருவருகைக் காலத் திருமடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த மடலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்துள்ள புதிய அரசாங்கம், நாட்டில் ஊழல்களை ஒழிக்கவும், போதைப்பொருள்களைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை உறுதியாக்கவும் எடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியன.

எனினும் பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இந்த அரசாங்கம் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இந்தச் சூழ்நிலையில் தமிழர் நலன் சார்ந்துள்ள தமிழ் அரசியற் கட்சிகளும், ஏனைய அமைப்புகளும் ஒற்றுமையுடன் செயற்பட்டு தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்டத் தொடர்ந்து பற்றுறுதியோடு உழைக்கவேண்டும். இன்று முழுநாட்டையும் உலுக்கிய வெள்ளம் மன்னாரையும் வெகுவாகப் பாதித்துள்ளது. வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்து எண்ணில்லாத பொருள்சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏராளமான விளைநிலங்கள் அழிவுக்குள்ளாகியுள்ளன. கால்நடைகள் பல இறந்துள்ளன. பாதிப்புக்குள்ளாகாத மக்கள் பெருந்தன்மையோடு உதவிக்கரம் நீட்டி, பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க முன்வரவேண்டும்- என்றுள்ளது. (க-5666)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# சொல்லிக்கொண்டிராமல் செய்யுங்கள்!

தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில், தற்போதைய அரசாங்கம் அக்கறையற்றுச் செயற்படுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம். ஊழலை ஒழிக்கவும், போதையைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அரசாங்கம் எடுக்கும் முயற்சி பாராட்டுக்குரியது. தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் அரசாங்கம் அசமந்தமாகச் செயற்படுகின்றமை வெளிப்படையான அவதானிப்பு என்றும் நொந்துகொண்டுள்ளார் அவர். இலங்கை அரசாங்கம் தமிழர்களின் தேசியப் பிரச்சினைகளைக் கையாள்வதில் வெளிப்படும் பல வீனங்களை-இடைவெளிகளை காலக்கண்ணாடியாக உணர்த்தும்வகையிலேயே மன்னார் மறைமாவட்ட ஆயரின் கருத்துகள் அமைந்துள்ளன என்றால் அதை மறுப்பதற்கில்லை.

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம், ஆட்சியைப் பொறுப்பேற்ற நாள்முதல் ஏதோவொரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்குப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது என்பது வெள்ளிடைமலை. பலர் கோடிட்டுக் காட்டுவதைப் போன்று, போதைப்பொருளை ஒழிப்பதிலும், ஊழலைக் கட்டுப்படுத்துவதிலும், பொருளாதாரத்தை உறுதியாக்குவதிலும் அரசாங்கம் மேற்கொள்ளும் அர்த்தமுள்ள முயற்சிகள் பாராட்டுக்கு உரியன. அரசியற்கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வு, பௌத்த பேரினவாதத் திணிப்பு, பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம் எனத் தமிழர்களின் 70 ஆண்டுகால கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் எத்தகைய முயற்சிகளை எடுத்திருக்கின்றது என்று கேட்டால், அதற்கான பதில்கள் அவ்வளவு நேர்த்தியாக அமையாது.

தமிழர்களின் பிரச்சினைகள், ஒரு நாடாக எதிர்கொள்ளவேண்டிய தேசியப் பிரச்சினைகள் என இரு வேறு மனோநிலையில் இருந்துதான் இந்த விடயங்களை ஆரம்ப நாள்முதல் அரசாங்கம் அணுகிவருகின்றது. ஒரு கோப்பை தண்ணீரில் ஒருதுளி ரசம் மறைவதைப் போன்று, அநுர அரசாங்கத்தின் இன்னபிற நடவடிக்கைகளில் தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைகள் நீர்த்துப்போகச் செய்யப்படுகின்றன. இதுதான் அரசாங்கத்தின் பெரும் மூலதனம். தமிழர்களைப் பொறுத்தவரை இதுவே பெரும் ஆபத்தான விடயம். நாட்டில் இடம்பெற்றுவரும் மாற்றங்களை தமிழ்மக்கள் வரவேற்கின்றனர். சிங்களக்கட்சிகளுக்கும், சிங்கள மக்களுக்கும் இல்லாத அளவுக்குப் பெரியளவு புரிதல் தற்போதைய அரசாங்கத்தின் மட்டில் தமிழர்களுக்கு உள்ளது. ஏனெனில், தமிழ் மக்கள் யதார்த்தத்தின் பாற்பட்டு சிந்திக்கக் கூடியவர்கள். ஆனால், அவர்களின் எண்ணப்பாட்டை -மனோநிலையை அரசாங்கம் தனக்கான வாய்ப்பாகப் பயன்படுத்தக்கூடாது. மாறாக, தமிழர்களின் விடயத்தின் தனக்கு இருக்கும் கடமையையும் பொறுப்புகளையும் அரசாங்கம் உணர்ந்துகொள்ளவேண்டும்.


அரசியற்கைதிகளின் விடுதலை தொடக்கம் -காணி விடுவிப்பு வரை அரசாங்கம் வழங்கிய ஏராளமான வாக்குறுதிகள் இன்றளவும் வார்த்தைஜாலங்களாகவே உள்ளன. அந்த வாக்குறுதிகள் என்றைக்குச் செயலுறுப்பெறுகின்றனவோ அன்றுதான் இந்த அரசாங்கம் அனைவருக்குமான அரசாங்கமாக அமையும் – அள்ளி வழங்கப்பட்ட மக்களாணைக்கு அர்த்தம் கிட்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

நம்மால் நேற்றைய தினத்தை சரிசெய்யமுடியாது,
ஆனால் நாளைய தினத்தை உருவாக்கமுடியும்.

சத்குரு



## வெள்ளப் பாதிப்பு

# கிளிநொச்சி மாவட்டத்துக்கு 277 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



**கிளிநொச்சி,டிசெ. 8**

**கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தப் பாதிப்புக்காக நான்கு பிரதேச செயலகங்களுக்கும் 277மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வீடுகளைச் சுத்தப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் 25000ரூபா பணம் வைப்பிலிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 153 குடும்பங்களுக்கு இந்தத் தொகை வைப்பில் இடப்பட்டுள்ளது. இதேவேளை 500மாடுகளும் 200ஆடுகளும் இயற்கை அனர்த்தத்தினால் உயிரிழந்துள்ளன- என்றார். (ச-113)

## தெஹிவளையில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி!

கொழும்பு,டிசெ. 8

தெஹிவளை ஏ குவார்ட்டர்ஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் 34 வயதுடைய ஒருவர் துப்பாக்கிதாரியால் நேற்றுச்சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்தவர், கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹிவளைப் பொலிஸார் துப்பாக்கிச்சூடு குறித்து விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## அத்தியாவசியசேவைகள் முறையிடுவதற்கு ‘1904’

அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக பொது மக்கள் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.1904 எனும் அவசர இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அனர்த்தப் பாதிப்பு மியான்மர் உதவி!

கொழும்பு,டிசெ. 8

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மியான்மரில் இருந்து நிவாரணப் பொருள்கள் அடங்கிய விமானம் இலங்கையை நேற்று வந்தடைந்தது. இவற்றில் அத்தியாவசிய மற்றும் மருத்துவப் பொருள்கள் என்பன அடங்குகின்றன. இதனை மியான்மருக்கான இலங்கைத்தூதர் திருமதி மார்லர் தான் ஹ்தைக். மியான்மர் அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சகத்தின் இயக்குநர் ஜெனரல் சாவ் பியோவின் ஆகியோர் அரசாங்க பிரதிநிதிகள் குழுவிடம் ஒப்படைத்தனர். (ச-இ)

# பல மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.8

நாட்டின் பல மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு 3ஆம் நிலை மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு 2ஆம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, மாத்தறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



நாளை
செவ்வாய்க்கிழமை - கார்த்திகை 23
09.12.2025
சுபநேரம் : 10.48 - 12.18
ராகுகாலம் : 03.18 - 04.48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த முன்னெச்சரிக்கைகளை இனியும் அலட்சியப்படுத்தக்கூடாது!



## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு, டிசெ.8**

**அனர்த்தம் தொடர்பான தகவல்கள் முன்கூட்டியே கிடைத்த நிலையிலும் அதுதொடர்பாக மக்களுக்கு முன்னெச்சரிக்கை வழங்குவதற்கு அரசாங்கம் தவறியுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறும் போது விழிப்புடன் செயற்பட இதுவொரு பாடமாகும் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சூறாவளி அனர்த்தத்துக்கு முன்பாகவே அதுதொடர்பான சம்பந்தப்பட்ட தரப்பினரின் அறிவிப்புகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியரின் அறிவிப்புகளும் வெளிவந்திருந்தன. மிகப் பாரதூரமான அளவிலான புயல் ஒன்று வரவுள்ளதாகவும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்றும் மிகத் தெளிவாக குறிப்பிடப் பட்டு அதற்கேற்ப முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைக் கவனத்தில் எடுத்து அரசாங்கம் சில ஏற்பாடுகளை ஏற்கனவே செய்திருக்குமாக இருந்தால் இந்த அனர்த்தங்களை ஓரளவுக்காவது குறைத்திருக்கலாம். இயற்கையான அழிவுகளை யாராலும் கட்டுப்படுத்தமுடியாது என்றாலும்கூட முற்கூட்டியே பல விடயங்கள் அறியவருகின்றபொழுது அதிலிருந்து மக்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை எடுத்திருக்கமுடியும்.

அரசாங்கத்தின் மேல் குற்றஞ்சாட்டுவதற்கு அப்பால், எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறும்போது எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி இவ்வாறான விடயத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டியுள்ளது.

இவ்வாறான நிலைமை இனிமேலும் ஏற்படாமல் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தேவையை இந்த அழிவுகள் உணர்த்தி நிற்கின்றது - என்றார். (ச-27)

### டித்வா புயலின் எதிரொலி

# மன்னார் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

மன்னார்,டிசெ.8

நாடு முழுவதிலும் அழிவை ஏற்படுத்திய டித்வா புயலால், மன்னார் மாவட்ட மீனவர்களும் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

எனினும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை என்று பனங்கட்டுகொட்டு மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாளாந்தம் தொழில் செய்து பிழைக்கும் நாம் தற்போதைய காலநிலையால் தொழிலுக்குச் செல்ல முடியவில்லை. வெள்ளத்தில் தத்தளித்தவர்களை எமது படகுகள் மூலம் காப்பாற்றியுள்ளோம்.

புயலின் தாக்கத்தால் எமது கடற்பகுதி கழிவுகளால் நிறைந்துள்ளது. அதனால் எமது மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதில்லை. அவ்வாறு சென்றாலும் மீன் கிடைப்பதில்லை. கடல் சாக்கடை போல் இருட்டாகக் காட்சி அளிக்கின்றது. எமது படகுகள், வலைகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. எனவே எமது வாழ்வாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு, உரிய அதிகாரிகள் நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றனர். (கு-213)

# பெரும்பான்மை இனத்தவர்கள் புலிபாய்ந்தகல்லில் அத்துமீறல்!



## தடுத்துநிறுத்துமாறு ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

முல்லைத்தீவு, டிசெ.8

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் புலிபாய்ந்தகல் சுற்றுலா ஒதுக்கிடத்தில் பெரும்பான்மை இன மீனவர்கள் சிலர் அடாத்தாக மீன் வாடிகளை அமைத்து - கடற்கரையில் சட்டவிரோதமாக படகுகளையும் நிறுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவிரோத செயற்பாடு தொடர்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று களநிலைமைகளைப் பார்வையிட்டுள்ளதுடன், இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளுக்கெதிராக உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரியதரப்பினரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரனையும் நேரடியாகச் சந்தித்து இந்தச் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் தெரியப்படுத்தினார். குறித்த புலிபாய்ந்தகல் பகுதி சுற்றுலாத் தலத்துக்கென ஒதுக்கப்பட்ட பகுதியாகும். அங்கு இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்கமுடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். குறித்த சட்டவிரோத செயற்பாடுகளுக்கெதிராக உரியவகையில் சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென இதன்போது மாவட்டச்செயலாளர் உறுதியளித்தார். (ச-26,246)

# கற்பிட்டிக் கடற்கரையில் போதைப்பொருள்கள் மீட்பு

கற்பிட்டிக் கடற்கரையில் சந்தேகத்துக்கிடமான படகொன்றிலிருந்து 63 கிலோகிராம் 718 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 14 கிலோகிராம் 802 கிராம் ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே குறித்த போதைப்பொருள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த போதைப்பொருள் தொகை மேலதிக விசாரணைக்காக பொலிஸ் போதைப் பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# காக்கைதீவில் வீதியோரத்தில் வீசப்படும் விலங்குக் கழிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.காக்கைதீவுச் சந்தைக்கு அண்மித்த பகுதியில் வீதியோரத்தில் விலங்குக்கழிவுகள் உள்ளிட்ட பல்வேறு கழிவுப் பொருள்கள் தொடர்ச்சியாக வீசப்பட்டுவருவதால், அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதாரச்சீர்கேடும் ஏற்பட்டுள்ளது. இறைச்சிக்கு வெட்டப்பட்ட மாட்டின் தலை உள்ளிட்ட பல்வேறு விதமான கழிவுகளை நாய்கள், பறவைகள் தூக்கிச் சென்று வெவ்வேறு இடங்களில் பரவலடையச் செய்வதை அவதானிக்கமுடிகின்றது. அத்துடன் கழிவுகளை உண்பதற்கு நாய்கள் வீதியின் குறுக்கும் மறுக்குமாகச் செல்வதால் விபத்துகள் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே இதுதொடர்பில் யாழ். மாநகரசபையினர், மானிப்பாய் பிரதேசசபையினர் மற்றும் பொதுச்சுகாதார மருத்துவ பணிமனையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு-27)



# பெரியகுளம் நெல் வயல்கள் வெள்ளத்தில் முற்றாக அழிவு

## விவசாயிகள் கவலை

கிளிநொச்சி,டிசெ.8

டித்வா புயலின் தாக்கத்தால், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் நெல் வயல்கள் முற்றாக அழிவடைந்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்து, வான்கதவுகள் திறந்துவிடப்பட்டமையால் தாழ்நிலப்பகுதிகளான பன்னங்கண்டி, முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை, பெரியகுளம் போன்ற பகுதிகளில் பல ஏக்கர் நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன. வெள்ளஇடரால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களை மாவட்டச் செயலர் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர். “நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு 45 நாள்கள் கடந்த நிலையில் கடந்த வெள்ளப் பாதிப்பால் வயல்கள் அழிவடைந்துள்ளன. கடந்த காலங்களிலும் இரணைமடுக்குளத்தின் நீர் வடிந்தோடும் பகுதிகளில் உள்ள பல விவசாயிகளின் நெற்செய்கை முற்றுமுழுதாக அழிவைச் சந்தித்தது. இதற்கான நட்டஈடு முற்றுமுழுதாக விவசாயிகளுக்குக் கிடைக்கப்பெறவில்லை.

இந்த வருடமும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளோம். எங்களது வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு உரிய நட்டஈடு வழங்கவேண்டும்" என்று விவசாயிகள் அதிகாரிகளிடம் தெரிவித்தனர். (கு-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீரற்ற காலநிலையால் கழிவுகள் சூழ்ந்து காணப்பட்ட அனலைதீவு இறங்குதுறை, ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினரால் கடந்த புதன்கிழமை துப்புரவு செய்யப்பட்டது. (ச-41-9)





# பொலிஸாரால் சிரமதானம்

வவுனியா, டிசெ.8

வவுனியா பொலிஸ் நிலையத்தினரால் நேற்று சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது. இதன் போது பொது மருத்துவமனை, பேருந்து நிலையம் மற்றும் நகரின் முதன்மை வீதிகள் என்பன துப்புரவு செய்யப்பட்டன. பெருமளவான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். (ச-110)

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 29 குடும்பங்களுக்கு எல்.ஓ.எல்.சி. பினான்ஸ் நிறுவனத்தினால் அத்தியாவசிய உதவிப் பொருள்கள் பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. (ச-41-9)



# பச்சிலைப்பள்ளியில் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், டிசெ.8


வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தினால் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாதிரிக்கிராமம் தம்பகாமம் மற்றும் அயற்கிராமங்களிலுள்ள சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சிநெறி பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ச.குணஜா தலைமையில் நடைபெற்ற பயிற்சிநெறியில் வளவாளர்களாக வடமாகாண தொழிற்றுறைத் திணைக்கள உத்தியோகத்தர்களான தி. திவாகரன் மற்றும் ஆர். கௌசிகன் ஆகியோரும் 18 தொழில் முயற்சியாளர்களும் கலந்துகொண்டனர். (ச-41-9)



இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு முள்ளியவளை கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் உலர் உணவுப் பொருள்கள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டுள்ளன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இந்த உதவியை வழங்கிவைத்தார். (ச-41-66)





வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேச மக்களுக்கு வழங்குவதற்கென கிறிசலிஸ் நிறுவனத்தினால் ஒரு தொகுதி உதவிப்பொருள்கள் பிரதேச செயலகத்திடம் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது. (ச-41-9)

ஊர்காவற்றுறை பிரதேசசபைக்குட்பட்ட அனலைதீவுக் கிராமத்தில் வெள்ளநீர் வழிந்தோட முடியாமல் காணப்பட்ட இடங்களை சபை உத்தியோகத்தர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை துப்புரவு செய்தனர். (ச-41-9)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி நகர் புவேந்தன் முன்பள்ளியின் 29ஆவது வருடாந்த கலைவிழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும் நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.(எ-41-159)



## கருத்தரங்கு

சாவகச்சேரி, டிசெ.8

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நுணாவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவு கர்ப்பிணித் தாய்மாருக்கான ஆரோக்கியமான குடும்பம் மற்றும் போதைப்பொருள் பாவனை முற்தடுப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நுணாவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் நடத்தப்பட்டது. நிகழ்வில் வளவாளர்களாக பிரதேச உளவளத் துணை உதவியாளர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் போதைப்பொருள் தடுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-41-9)




# பிரதேச அபிவிருத்தி வங்கிக்கிளை திறப்பு

முல்லைத்தீவு, டிசெ.8

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தின் நகர்ப் பகுதியில் முல்லைத்தீவு வீதியில் அமையப்பெற்ற பிரதேச அபிவிருத்தி வங்கியின் கிளையின் திறப்பு விழா புதுக்குடியிருப்புக் கிளையின் பொது முகாமையாளர் எஸ்.சுஜீபனு தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஏ.பி.லசந்த பெர்னாண்டோ வங்கிக் கிளையைத் திறந்துவைத்தார். (ச-41-19)




வடமாகாண சபையின், விளையாட்டுத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான தேக ஆரோக்கிய நடைபயிற்சி நிகழ்வு உடுவில் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச)




## நடமாடும் சேவை

கிளிநொச்சி,டிசெ.8

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் விசேட காணி நடமாடும் சேவை அண்மையில் நடைபெற்றது.

கண்டாவளைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேரடியாகக் கலந்து கொண்டு பொதுமக்களின் காணிப் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். இதன்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 17 காணி தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு, அவற்றுக்கான தீர்வுகள் வழங்கி வைக்கப்பட்டன. (ச)

பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் யாழ்.வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெண்களுக்கான கலாசார நிகழ்வும் சான்றிதழ் வழங்கலும் வடமராட்சி கிழக்கு கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன.

இதன்போது கலைநிகழ்வுகள், சான்றிதழ் வழங்கல், விருந்தினர்களுக்கு நினைவுச்சின்னங்கள் வழங்கல் என்பன சிறப்புற்றன. (ச-41-27)





வலி.வடக்கு பிரதேசசபையால் சித்த வைத்திய பீட மாணவனுக்கு மடிக்கணினி அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது.

இதற்கான நிதியனுசரணையை ஞானோதயம் கருணைக் கரங்கள் அமைப்பின் ஸ்தாபகர் தர்மஜோதி க.சிவஞானம் வழங்கியிருந்தார். (ச-41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 02 . 1929



மறைவு 07 . 12 . 2025

## நேசம்மா செல்வதுரை

மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நேசம்மா செல்வதுரை அவர்கள் நேற்று (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற தம்பு செல்வதுரை (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னம்மா தம்பதியரின் மருமகளும், செல்வதுரை நகேந்திரன் (ஓய்வுபெற்ற இளைஞர் சேவை மன்ற அதிகாரி) அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சரோஜினிதேவி நாகேந்திரன் (ஓய்வுபெற்ற பிரதி முகாமையாளர் மக்கள் வங்கி) அவர்களின் அன்பு மாமியாரும், தனுஷியா, நிலோஷனா (மக்கள் வங்கி), கிருஷிகா (மக்கள் வங்கி), ஜயந்தன் (பொறியியலாளர்), சுகேசன் (Programming Component Manager - Giz), சேந்தன் (ICT Officer - மாவட்டச் செயலகம் வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், நைமிஹன், கிரிஷபன் ஆகியோரின் அன்புப் பூட்டியாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, செல்வராசா, பரமேஸ்வரி, பவளக்கொடி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2025) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"நேசவாசா"
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல் : செ.நாகேந்திரன் (மகன்)
077 224 9523, 021 2025 0462

(CR 46657) E

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 02 . 1952



மறைவு 29 . 11 . 2015

## திருமதி தர்மலக்ஷ்மி சூரியகுமார்

### திதி : சங்கடகர சதுர்த்தி

எத்தனை செல்வங்கள் வந்தாலுமே
எத்தனை இன்பங்கள் தந்தாலுமே
அத்தனையும் ஒரு தாயாகுமா - அம்மா
எமக்கு அது நீயாகுமா.
பத்து மாதம் சுமந்து பெற்று
அன்பும் பண்பும் போதித்து - பாரில்
பக்குவமாய் வாழ வழி காட்டினீர்கள் - அம்மா
ஆண்டுகள் பத்து உருண்டோடி விட்டதுவோ - அம்மா
உங்கள் திருமுகத்தைக் காண ஏங்குகின்றது எம் மனம்.
கனவில் நினைவாகவும் நினைவில் கனவாகவும்
என்றும் எங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் - அம்மா.
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

**என்றும் உங்கள் நினைவுடன் வாழும்**

72, அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

ந. சூரியகுமார் (கணவர்)
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(CS 60052 ) J-1

# சிறைக்கைதிகளால் மதிய உணவு தானம்

கொழும்பு நியூ மகசின் சிறைச்சாலைக் கைதிகள் நேற்றுமுன்தினம் தங்கள் மதிய உணவை டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட கொழும்பில் உள்ள மக்களுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். கைதிகளின் மதிய உணவு தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படவிருந்த கிட்டத்தட்ட ரூ. 400,000 மதிப்புள்ள உலர் உணவு கொலன்னாவப் பிரதேச செயலகப் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக வெலிக்கடைச் சிறைக்கைதிகளும் மட்டக்களப்புச் சிறைக்கைதிகளும் தமது மதிய உணவு தயாரிப்பதற்கான உலர் உணவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கண்ணீர் அஞ்சலி



## சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன்

**(உறுப்பினர் - கைதடி சைவ ஐக்கிய சங்கம்)**

கைதடியில் பிறந்து தற்போது கொழும்பில் வசித்து வந்தாலும், தான் பிறந்த மண், தனது ஊர், சைவ சமயம், கோயில்கள் என எல்லாவற்றின் வளர்ச்சியிலும் தனது பங்களிப்பை செய்து வந்தவர். அதுபோலவே ஆரம்ப காலத்திலிருந்து எமது சங்கத்தின் உறுப்பினராக இருந்த போதும், பின்நாட்களில் வேலை காரணமாக வெளிநாடு சென்ற போதும் சங்கத்தின் செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடவில்லை எனிலும் அதன் வளர்ச்சியில் தனது பங்களிப்பை செய்தவர். இன்று எம்முடன் இல்லை என்பதை ஏற்கமுடியாதுள்ளது. அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 18.11.1950 — மறைவு 04.12.2025

துயர் பகிரும்,
கைதடி சைவ ஐக்கிய சங்கம்

(CR 46658) E

# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு உதயகுமார்**
(புத்தூர் உபதபால் ஊழியர்)
தோற்றம் 24.12.1956

**உதயகுமார் வசந்திமாலா**
(நீர்வேலி மேற்கு, 4ஆம் மைல், இராஜ வீதி, நீர்வேலி)
தோற்றம் 08.02.1966

**இறைவன் அடியில் : 08.12.2011**

**மறக்க முடியுமோ?**

ஆறாத வடுவாய் எம்மனதில்............

பகைவர்களின் அசுரத்தனம் தாண்டவமாடி
பதின்நான்கு ஆண்டுகள் பறந்தது.

உறவெனும் வேடம்பூண்டு வேரறுத்தவர்கள்
ஊரறிய இறைவனால் பழிதீர்த்தல் கண்முன்னே நடந்தாயிற்று.

இரத்த சொந்தங்களே மண்ணாசையால் விசம்விதைக்க
இரக்கமற்று செய்யப்பட்ட கொடூர செயல் அது.

ஆசையாய் பெற்றுவளர்த்த அம்மாவுடன்
அரவணைத்து பண்பூட்டிய அப்பாவையும் சேர்த்து.

நொடிப்பொழுதில் கண்ணிமைத்து மூடமுன்பு
நோகாமல் இருந்து வஞ்சம் தீர்த்தீர்கள்.

வசந்தா எனும் மலரை குமர்ப்பிள்ளை கண்முன்னே
குமார் எனும் குணமான பண்பாளனையும் வேட்டையாடினீர்கள்.

அடேய்! படுபாதகர்களே!! இத்தனையும் சொல்லும் பாடம்
ஆண்டவன் இருக்கிறான்.காத்திருந்து கதைமுடிப்பான்.

பாவிகளால் காவுகொள்ளப்பட்டாலும் போற்றுதலுக்குரியவர்கள்
பெற்றோரே உங்கள் ஆத்ம சாந்திக்காக உளமாற வேண்டுகிறோம்.

**என்றும் உங்கள் நினைவிலேயே வாழும்...**

**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!**

**பிள்ளைகள் :**
செந்தூரன் (பிரான்ஸ்), குகதீபன் (கனடா),
சங்கீதன் (கனடா), கோபிகா (கனடா)


(CS 60120) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாவதியான பொருள்கள்

# வர்த்தக நிலையங்களுக்கு 1,33,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம்.டிசெ.8
பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில், காலாவதித் திகதி கடந்து உணவுப்பொருள்களை விற்பனை செய்த, இரண்டு விற்பனை நிலையங்களுக்கு ஒரு இலட்சத்து 33 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து, இரண்டு விற்பனை நிலையங்களிலும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது காலாவதியான உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன. இரு விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கும் எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, உரிமையாளர்கள் தம்மீதான குற்றச்சாட்டு களை ஏற்றுக்கொண்டதை அடுத்து இருவருக்கும் தண்டம் விதிக்கப்பட்டது. (க-100)







# சர்வாலய தீப உற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ.8
வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் திருக்கார்த்திகை சர்வாலயதீப உற்சவம் கடந்த வியாழக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41-66)

## அணையாவிளக்கு...

இந்த நினைவுத் தூபி கடந்த ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி இரவோடு இரவாக இனந்தெரியாதோரால் உடைத்துச் சேதமாக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அன்றைய தினமே தூபி மீளவும் அதே இடத்தில் அமைக்கப்பட்டது. இந்தநிலையில் தற்போது அந்த நினைவுத்தூபி மீண்டும் உடைக்கப்பட்டுள்ளது.
செம்மணி மனிதப்புதைகுழி மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்குச் சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணம் செம்மணி வளைவுக்கு அருகில் கடந்த ஜூன் மாதம் 23, 24, 25 ஆம் திகதிகளில் அணையாவிளக்கு எனும் பெயரில் மக்கள் எழுச்சிப் போராட்டம் "மக்கள் செயல்" எனும் தன்னார்வ அமைப்பால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டிருந்தது. அதன் ஞாபகார்த்தமாக நினைவுத் தூபி அமைக்கப்பட்டு அதில் அவ்வப்போது நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு வந்தன.
கடந்த செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் சர்வதேச சிறுவர் தினமான ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிவரை வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் செம்மணிப் பகுதியில் சுழற்சி முறையிலான உண்ணாவிரப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போதும் இந்த நினைவுத்தூபியில் தினமும் நினைவுச் சுடரேற்றியே அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (அ-எ-26-66)

## வெளிவாரிப்...

அழைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்ன தலைமையில் நடைபெறவுள்ளது.
இது தொடர்பில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வட்டாரங்களில் வினவிய போது, துணைவேந்தர் தெரிவு நடைமுறைகளின்போது சில பல்கலைக்கழகங்களில் ஏற்பட்ட குழப்பகரமான நிலைகளையடுத்து, சுற்றறிக்கை நியமங்கள், மதிப்பீட்டு முறைகள் மற்றும் புள்ளியிடல் தொடர்பான தெளிவுபடுத்தலுக்காகவே வெளிவாரிப் பேரவை உறுப்பினர்கள் சந்திப்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
அதேவேளை, துணைவேந்தர் தெரிவின் போது புள்ளியிடவுள்ள பேரவை உறுப்பினர்களை மாத்திரம் தனியாகச் சந்திப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருப்பதன் மூலம் மதிப்பீட்டில் செல்வாக்குச் செலுத்த அல்லது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான முயற்சியாக அது இருக்கலாம் எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மட்டத்தில் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.
வேறொரு பல்கலைக்கழகத்தில் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய நடத்தப்பட்ட துணைவேந்தர் தெரிவின்போது பேரவையின் முடிவை ஏற்றுக் கொள்ளாமல், துணைவேந்தர் பதவிக்கு மீள் விண்ணப்பம் கோருமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளமையையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.
அதேவேளை, நாளை நடைபெறவுள்ள துணைவேந்தர் தெரிவில், பீடாதிபதி ஒருவரின் வாக்குரிமையைக் கேள்விக்குட்படுத்தி உள்வாரிப் பேரவை உறுப்பினர் ஒருவர் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதால் நாளைய தெரிவுக் கூட்டம் குழப்பத்தில் முடிவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-எ-இ)

## இலங்கையின்...

என்று சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
இலங்கையின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் ஐந்தாவது மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல்களை மீண்டும் தொடங்குவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் இலங்கைக்கு வரவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
விரைவு நிதியளிப்பு வசதியின் கீழ் வழங்கப்படும் இந்த அவசர ஆதரவானது, இலங்கைக்கு ஏற்கெனவே உள்ள நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்ட அணுகலுடன் மேலதிகமாக வழங்கப்படும் நிதி என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.
அண்மையில் ஏற்பட்ட 'டித்வா' சூறாவளியின் தாக்கத்தையடுத்து, இலங்கை சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவிக்காக, விரைவு நிதியளிப்பு வசதியின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது. (அ-எ-இ)

## சட்டவிரோத...

விசேட அதிரடிப் படையினரும் இணைந்து சோதனை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பெறப்பட்ட அனுமதிக்கமையவே இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத சொத்துக் குவிப்புத் தொடர்பாகப் பலருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாகவே இந்த வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (அ-எ-26)


## எலிக்...

சலே காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கிளிநொச்சி, கண்ணகி நகரைச் சேர்ந்த, கண்டாவளை பிரதேச செயலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றும் ப.கிருபாகரன் (வயது-43) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கடந்த 5ஆம் திகதி காய்ச்சலால் பீடிக்கப்பட்ட அவர், தருமபுரம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரது குருதி மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருந்த நிலையில், அவருக்கு எலிக்காய்ச்சல் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.
அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்துள்ளார். (அ-எ-113)

## பண்ணைக்...

நால்வரில் இருவர் உயிரிழந்த நிலையில், இருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.
யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தைச் சேர்ந்த உதயறஜீந்தன் (வயது-18), ஜெனிஸ்டன் (வயது-18) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். ஆறுகால்மடத்தைச் சேர்ந்த திலோஜன் (வயது-20), கொட்டடியைச் சேர்ந்த சுதன் (வயது-25) ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.
இந்தச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-எ-26)

## மரண அறிவித்தல்



தோற்றம்:22.11.1939 மறைவு:07.12.2025

**திருமதி இராசையா சரஸ்வதி**
**(ஓய்வுநிலை ஆசிரியர்)**

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த இராசையா சரஸ்வதி அவர்கள் நேற்று (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் அமரர் இராசையா (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் ஜெயகோபால் (முன்னாள் தொழிநுட்ப உத்தியோகத்தர், பௌதீகவியல்துறை யாழ். பல்கலைக்கழகம்), ஜெயசோதி (ஓய்வுநிலை ஆசிரியர், வட்டு மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், லலிதாதேவி (முகாமைத்துவ உத்தியோகத்தர் பிரதேச செயலகம், காரைநகர்), மதிவதனன் (ஓய்வுநிலை அதிபர், யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஹர்ஸன் (வைத்தியர், யாழ். போதனா வைத்தியசாலை), காயத்திரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் நடைபெற்றது என்பதனை அறியத்தருகின்றோம்.
உடன் தகவல் தரமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
Tel:076 37 99 005

CR 46659A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வீடு - சங்கு'...

பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், மாகாணசபைத் தேர்தல், அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இரு தரப்பினரும் தனித்தனியாகச் செய்து கொண்டிருக்கும்விடயங்களை இணைந்து செய்வதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவுள்ளோம் என்று தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ் தேசியக் கட்சிகளின் இணைந்த செயற்பாட்டைக் கருத்தில் கொண்டு இலங்கை தமிழரசுக் கட்சி விடுத்த அழைப்பின் பேரில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இந்தச் சந்திப்பில் பங்கேற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், ஜனநாயகத்தமிழ்தேசியக்கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், முருகேசு சந்திரகுமார், சி.ரவீந்திரா, ஜனநாயகத்தமிழ்தேசியக்கூட்டணியின் பொதுச் செயலாளர் நா.இரட்ணலிங்கம் ஆகியோர் இந்தச்சந்திப்பில்பங்கேற்றனர்.
சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:-
தற்போதைய சூழலில் தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது, முக்கியமான விடயங்களில் இணைந்து செயற்படுவது என்பது தொடர்பாக நீண்ட கலந்துரையாடலொன்றை நாம் நடத்தினோம். இந்தச் சந்திப்பில் இரண்டு முக்கியமான விடயங்களை பேசினோம்.
முதலாவது, மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் பிற்போடப்படும் சூழ்நிலையில் அதிகாரப் பகிர்வை கோரும் நாங்கள் அதை அனுமதிக்க முடியாது. மிக விரைவில் மாகாணங்களுக்கு மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளின் கையில் அரசியல் அதிகாரம் போய்சேரவேண்டும். அதற்காக மாகாணசபைத் தேர்தல்கள் விரைவாக நடத்தப்பட வேண்டும் என்ற அழுத்தத்தை நாங்கள் சேர்ந்து கொடுப்பதாகத் தீர்மானம் எடுத்திருக்கிறோம்.
மூன்றையது, இரு தரப்பினரும் செய்து கொண்டிருக்கின்ற விடயத்தை சேர்ந்து செய்வதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். தமிழ் மக்களுக்கான நீதியான நியாயமான அரசியல் தீர்வு தொர்டபாக நாங்கள் ஏற்கனவே சேர்ந்த தரப்புகள் என்ற ரீதியில், இது தொடர்பாக ஒருமித்த நிலைப்பாட்டை எட்டுவதற்காக தொடர்ச்சியான சந்திப்புகளை நடத்தத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (அ-எ-26)

## முன்னாள்...

இிராஜதுரை தனது 98ஆவது வயதில் சென்னையில் காலமானார்.
இராஜதுரை 1956ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டுவரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார். மட்டக்களப்பு மாநகரசபையின் முதலாவது முதல்வராகவும் இராஜதுரை தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.
மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்த அவர், பின்னர் மெதடிஸ்த மத்திய கல்லூரியில் மேல் நிலைக் கல்வியை நிறைவு செய்தார். ஊடகவியலாளராகவும் செயற்பட்ட இராஜதுரை, 'சுதந்திரன்' பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றியுள்ளார்.
1956ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் மட்டக்களப்பு தொகுதியில் போட்டியிட்டு முதன்முறையாக நாடாளுமன்றம் சென்றார். தொடர்ந்து 1960 மார்ச், 1960 ஜூலை, 1965 மற்றும் 1970 ஆகிய தேர்தல்களிலும் வெற்றி பெற்றார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்ததைத் தொடர்ந்து, 1977ஆம் ஆண்டு தேர்தலில் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு மீண்டும் வெற்றி பெற்றார். 1979 பெப்ரவரி 10ஆம் திகதி, அவர் தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர், அவரை ஆளும் கட்சியில் இணைப்பதற்காக 1979 பெப்ரவரி 22ஆம் திகதி அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. பின்னர் அவருக்கு இந்து சமய, பண்பாட்டு, தமிழ் அமுலாக்கல் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. பின்னர் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டு பணியாற்றினார்.
அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னர், சென்னையில் வாழ்ந்து வந்த நிலையில் அவர் காலமானார். அவரது இறுதிக்கிரியை சென்னையில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## இலங்கையர்...

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கையர் தின நிகழ்வுகளை நடத்துவதற்காக ஒதுக்கப்பட்ட 300 மில்லியன் ரூபாவை நிவாரண நடவடிக்கைக்குப் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.
எதிர்வரும் 12,13 மற்றும் 15 ஆம் திகதிகளில் இலங்கையர் தின நிகழ்வை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-எ-44)

## தமிழரின்...

அந்த இடத்துக்கு நேரடியாகச் சென்று ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், இந்த ஆக்கிரமிப்பு முயற்சியைத் தடுப்பதற்கு கரைதுறைப்பற்று பிரதேசசெயலகம் போன்ற உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்கத் தவறினால், நாம் களத்தில் இறங்கி அபகரிப்பு முயற்சியை தடுத்து நிறுத்துவேண்டிய நிலை ஏற்படும் என்று தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கொக்குத்தொடுவாயிலிருந்து தமிழ் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். தமிழ் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்படுவதற்கு முன்னர் கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 15ஆம் கட்டைப் பகுதியில் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர்.
தமிழ் மக்கள் இடப்பெயர்வுக்கு முன்னர் சிறுதானியப் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்திய சுமார் நூறு ஏக்கருக்கும் மேற்பட்ட அவர்களது பூர்வீக காணிகள், 2011ஆம் ஆண்டு மீள்குடியமர்வுக்குப் பின்னர் வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனவளத்திணைக்களம் போன்ற திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லைக்கற்களும் இடப்பட்டுள்ளன.
தங்களது பூர்வீக சிறுதானியப் பயிர்ச்செய்கைக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று காணிகளுக்குரிய தமிழ்மக்கள் தொடர்ச்சியாகக் கோரிவந்ததுடன், அதை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர்.
இந்தநிலையில், தற்போது பெரும்பான்மை இனத்தவர்கள் சிலர், வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் ஆக்கிரமிப்பில் இருக்கும் கொக்குத்தொடுவாய் தமிழ் மக்களுக்குரிய பூர்வீக சிறுதானிய பயிர்ச்செய்கைக் காணிகளை ஆக்கிரமிக்கும் முயற்சிகளை எடுத்துள்ளனர். கொக்கிளாய் முகத்துவாரத்தில் தங்கியிருந்து பருவகால மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் சிலராலேயே இந்த ஆக்கிரமிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது.
கொக்கிளாயில் தென்னிலங்கையிலிருந்து வருவோர் பருவகாலத்தில் மீன்பிடியில் ஈடுபடுவர். பின்னர் பருவகால மீன்பிடிச் செயற்பாடுகள் முடிவுற்றதும் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவிடுவார்கள். ஆனால் தென்னிலங்கையைச் சேர்ந்த சில பருவகால மீனவர்கள் தற்போது எமது தமிழ்மக்களுக்குரிய பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து குடியேற முயற்சிக்கின்றனர்.
கொக்கிளாய் - முல்லைத்தீவு பிரதான வீதியின் இருபுறமும் உள்ள, வனவளத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் பூர்வீக காணிகளுக்கு கயிறு, மற்றும் கம்பிகளை கட்டி அபகரிப்புச்செய்கின்ற செயற்பாடுகளில் இந்த தென்னிலங்கையைச் சார்ந்த பருவகால மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.
இந்த அபகரிப்பு முயற்சிகள் இடம்பெறும்போது கொக்குத்தொடுவாய் வடக்கு பகுதி மக்கள் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுத் தடுத்து நிறுத்தியுள்ளனர். இது தொடர்பில் என்னிடமும் மக்களால் முறையிடப்பட்டிருந்தது. அந்த ஆக்கிரமிப்பு முயற்சிகள் தொடர்பில் நேரடியாகப் பார்வையிட்டு, இங்கு இடம்பெற்றுள்ள ஆக்கிரமிப்பு முயற்சிகளை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளேன்.
இதுதொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலக காணி உத்தியோகத்தருக்கும் தெரியப்படுத்தியதுடன், இவ்வாறு தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை ஆக்கிரமிக்க முயற்சிகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இந்த ஆக்கிரமிப்பு முயற்சிகளைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன் - என்றார். (அ-எ-இ)

## பேரிடர்...

ளது. இயற்கை பேரிடரில் சிக்கி 190 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
கண்டி மாவட்டத்திலேயே அதிகளவான உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. அந்த மாவட்டத்தில் மட்டும் 232 பேர் உயிரிழந்துள்ளனர். பதுளை மாவட்டத்தில் 90 உயிரிழப்புக்களும், நுவரெலியா மாவட்டத்தில் 89 உயிரிழப்புக்களும், குருநாகல் மாவட்டத்தில் 61 உயிரிழப்புக்களும் பதிவாகியுள்ளன.
சீரற்ற காலநிலையால் நாட்டின் 25 மாவட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. 6 இலட்சத்து 11 ஆயிரத்து 530 குடும்பங்களைச் சேர்ந்த 21 லட்சத்து 79 ஆயிரத்து 138 பேர் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.
இவர்களில் 27 ஆயிரத்து 663 குடும்பங்களைச் சேர்ந்த 89 ஆயிரத்து 857 பேர் 956 பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 4 ஆயிரத்து 517 வீடுகள் முழுமையாகவும், 76 ஆயிரத்து 66 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## சுனாமியை...

டித்வா புயலால் ஏற்பட்ட மொத்தச் சேதம் 2.1 ட்ரில்லியன் டொலரை விட அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.
அதேவேளை, இறுதிச் சேத அறிக்கையைத் தயாரிக்க மேலும் இரண்டு மாதங்கள் தேவைப்படும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

**வேலையாட்கள் தேவை**
யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சலூன் ஒன்றிற்கு அனுபவம் மிக்க வேலையாட்கள் தேவை
தொடர்புகளுக்கு:
**077 168 4381**

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் மானிப்பாய் நவாலியில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- நவாலி அரசடிச் சந்தியிலிருந்து 250m தூரம்
- நவாலி மகா வித்தியாலயம் 250m தூரம்
- நவாலி கொத்துகட்டி வீதியில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி, நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்

தொடர்பு:- 076 990 3039
074 029 2338
(CS 30864) A

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் நவகிரி மெயின் றோட்டுடன் 48 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியில்
- செம்மண்தரை, நிலப்பரப்பு, குடியிருப்புக்கள் சூளவுள்ள பகுதி
- நிலாவரைக் கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ்ப்பாணம் பஸ் நிலையம் 10 km


தொடர்பு:- 076 860 2770
076 987 8617
(CS 30865) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
28 . 07 . 1949

**மறைவு**
07 . 12 . 2025



## தியாகராசா சச்சிதானந்தமூர்த்தி

மண்டைதீவு 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல 36, ஞானவைரவர் வீதி உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா சச்சிதானந்தமூர்த்தி (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா - சின்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சேது - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், சதன், ஆனந்தி, மதன், கஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோறஞ்சினி, ஜெயக்குமார், சாந்தினி, ஜீவகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சந்தானலட்சுமி, இராஜேஸ்வரன், வர்ணலிங்கம், வர்ணலட்சுமி, ஜெயமாலினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சியாமளா, செல்வி, வரதன், மூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், சுரேக்கா, பிரவீன், பிரதீஸ், மதுஷா, மதுஷன், வனுஷன், அபிகேஷன், அகிம்சன், அஸ்விகன், யுதீஸ்டன், விருஷாலி ஆகியோரின் அன்புப் பேரனும், டியானா, றியானா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 08.12.2025 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60119) E

**தொடர்புகளுக்கு**
**077 447 7148**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்[illegible] அலுவலகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org